# சாதாரணக் கூட்டம்

கோயம்புத்தூர் மாவட்டம், கூடலூர் நகராட்சி சாதாரணக் கூட்டம் 31.08.2023ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து பரிசீலித்து முடிவு செய்யப்பட உள்ளதால், துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர மன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**முன்னிலை :-**

1. **திரு.அ.அறிவரசு** அவர்கள், தலைவர், கூடலூர் நகராட்சி
2. **திரு.சி.மனோகரன்** அவர்கள், ஆணையாளர்(கூ.பொ), கூடலூர் நகராட்சி

**பொருள் எண்:01**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.16493/2022/CFC-1, நாள். 04.08.2023ன் படி 15வது நிதிக்குழு மான்யம் 2023-24 (Tied Grant) நிதியின் கீழ் கூடலூர் நகராட்சிக்கு 10 பேட்டரி வாகனங்கள் (BOV) மற்றும் 2 இலகுரக வாகனங்களை (LCV) ரூ.34.35 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சிக்கு 10 எண்ணிக்கையிலான BOV வாகனங்கள் கொள்முதல் செய்தல் பணி. | 19.75 |
| 2 | கூடலூர் நகராட்சிக்கு 2 எண்ணிக்கையிலான இலகுரக வாகனங்கள் (LCV) வாகனங்கள் கொள்முதல் செய்தல் பணி. | 14.60 |
| | **மொத்தம்** | **34.35** |

**பொருள் எண்:02**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.9192/2022/SBM1, நாள். 21.08.2023ன் படி தூய்மை இந்தியா திட்டம்(ந) 2.0ன் கீழ் கழிவுநீர் ஊர்தி (Cesspool Tanker) ரூ.43.25 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய கீழ்க்கண்டவாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | மத்திய அரசு மான்யம் (ரூ.இலட்சத்தில்) | மாநில அரசு மான்யம் (ரூ.இலட்சத்தில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சிக்கு கழிவுநீர் ஊர்தி கொள்முதல் செய்தல். | 43.25 | 21.63 | 14.27 | 7.35 |

மேற்காணும் பணியில் மத்திய மற்றும் மாநில அரசு மான்யம் போக மீதமுள்ள தொகை ரூ.7.35 இலட்சம் நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:03**

கோயம்புத்தூர் ஆட்சித் தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.928/2023/ஆ2 நாள்.19.07.2023ன் படி **பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022-2023ன்** கீழ் கூடலூர் நகராட்சியில் கீழ்க்காணும் பணி மேற்கொள்ள 11.08.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணி விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 தெக்குப்பாளையம் பிரிவு, கோவை மேட்டுப்பாளையம் சாலை (மேற்கு பகுதி)யில் பேருந்து நிழற்கூடம் அமைத்தல். | 7.50 | **கணலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாரர்** | **0.10% குறைவு** |
| | | | திரு.எஸ்.விஜய குமார், ஒப்பந்ததாரர் | 1.50 % அதிகம் |
| 2 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 வீரபாண்டி பிரிவு, லட்சுமி தியேட்டர் முன்புறம் பேருந்து நிழற்கூடம் அமைத்தல். | 7.50 | **கணலி கன்ஸ்டிரக்சன்ஸ், ஒப்பந்ததாரர்** | **0.10% குறைவு** |
| | | | திரு.எஸ்.விஜய குமார், ஒப்பந்ததாரர் | 1.50 % அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததார்களுக்கு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:04**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 காமராஜ் நகர் பகுதியில் கோவில் அருகில் பேவர் பிளாக் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.7.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் பணியை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் எண்:05**

கூடலூர் நகராட்சியில் நகர்மன்றத் தீர்மான எண்.291 நாள்.31.07.2023 ன் படி நகராட்சிக்குட்பட்ட நகராட்சிப்பள்ளிகளில் பெயர்ப் பலகை மாற்றியத்தல் பணி மேற்கொள்ள ரூ.1.60 இலட்சத்திற்கு அனுமதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேலும் பள்ளிகளில் புதியதாக பெயர்ப் பலகைகள் அமைப்பதற்கும், ஏற்கனவே பள்ளிகளில் உள்ள பலகைகளில் கூடுதலாக வர்ணம் பூசி பெயர்ப் பலகைகள் மாற்றியமைத்தல் பணி மேற்கொள்ளவும் ஆகும் கூடுதல் செலவினம் ரூ.1.10 இலட்சம் நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:06**

கூடலூர் நகராட்சியில் நகராட்சிப் பள்ளிகளில் பெயர்ப் பலைகள் மாற்றியமைத்தல் பணி மேற்கொள்ளவும், புதியதாக பெயர்ப் பலகைகள் அமைப்பதற்கும் 08.08.2023 அன்று கோரப்பட்ட விலைப்புள்ளியில் கீழ்க்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணி விபரம் | அலகு | விலைப்புள்ளி தொகை விபரம் | | |
|---|---|---|---|---|---|
| | | | Kanali constructions | Sparkle and Stone | Majestic Interiors |
| 1 | 2 | 3 | 4 | | |
| 1 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட 10 நகராட்சிப் பள்ளிகளின் பெயர்ப் பலகைகளில் வர்ணம் பூசி நகராட்சிப் பள்ளி என பெயர் மாற்றியமைத்தல். | 1 சதுர மீட்டருக்கு | 2007 | 2010 | 2015 |
| 2 | புதியதாக பெயர்ப் பலகைகள் அமைத்தல். | 1 கிலோ கிராமிற்கு | 265 | 270 | 275 |

மேற்காணும் விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கணலி கன்ஸ்டிரக்சன்ஸ் என்ற நிறுவனத்திற்கு இப்பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:07**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17404/2022/M1, நாள். 17.08.2023ன் படி கூடலூர் நகராட்சி மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்த, கீழ்க்காணும் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட 10 பள்ளிகள் மற்றும் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட 3 பள்ளிகளில் உணவு வழங்கும் இடங்களில் 5 x 2 ½ ச.அடி அளவு கொண்ட பெயர்ப்பலகைகள் பொருத்த ஆகும் தோராய செலவினம் ரூ.1.70 இலட்சம் நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ளவும், இப்பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோர நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பள்ளிகள் விபரம் |
|---|---|
| 1 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, பழைய புதூர். |
| 2 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, கூ.கவுண்டம்பாளையம். |
| 3 | கூடலூர் நகராட்சி நடுநிலைப்பள்ளி, செல்வபுரம். |
| 4 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, புதுப்புதூர். |
| 5 | கூடலூர் நகராட்சி நடுநிலைப்பள்ளி , சாமிசெட்டிபாளையம். |
| 6 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, விவேகானந்தா நகர். |
| 7 | கூடலூர் நகராட்சி ஆரம்பப்பள்ளி, திருமலைநாயக்கன்பாளையம். |
| 8 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, தேவையம்பாளையம். |
| 9 | கூடலூர் நகராட்சி ஆரம்பப்பள்ளி, இராவுத்தக்கொல்லனூர். |
| 10 | கூடலூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, தெக்குப்பாளையம். |
| 11 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பெரியநாயக்கன்பாளையம். |
| 12 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, கஸ்தூரிபாளையம். |
| 13 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, ஜோதிபுரம். |

**<u>பொருள் எண்:08</u>**

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.329/2023/க்யூ 2 நாள்.17.08.2023ன் படி கூடலூர் நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்த, கூடலூர் நகராட்சிக்குட்பட்ட 10 பள்ளிகள் மற்றும் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட 3 பள்ளிகளில் பயிலும் 865 பள்ளிக்குழந்தைகளுக்கு காலை உணவிற்குத் தேவையான தட்டுகள் மற்றும் டம்ளர்கள் கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1.52 இலட்சம் நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததால், இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றதற்கும் மேல் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:09</u>**

கூடலூர் நகராட்சியில் புதியதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த சமையற்கூடம் திறப்பு விழாவிற்கும், கூ.கவுண்டம்பாளையம் நகராட்சி துவக்கப் பள்ளியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்த, பந்தல் அமைத்தல், மேசை நாற்காலி, ஒலிபெருக்கி அமைத்தல் மற்றும் பேனர்கள் அமைத்து விழா நடத்த ஆகும் தோராய செலவினம் ரூ.2.50 இலட்சம் நகராட்சியின் பொதுநிதியில்

மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததால் இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றதற்கும் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

நகர்மன்றத் தலைவர்
கூடலூர் நகராட்சி
[illegible] 47.

**31.08.2023 அன்று நடைபெற்ற நகரமன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மானங்கள்**

| **பொருள் எண்** | **தீர்மான எண்** | **தீர்மானம்** |
|---|---|---|
| 1 | 310 | பார்வையிட்டு அங்கீகரிக்கப் படுகிறது. |
| 2 | 311 | அங்கீகரிக்கப் படுகிறது. |
| 3 | 312 | பார்வையிட்டு அங்கீகரிக்கப் படுகிறது. |
| 4 முதல் 5 முடிய | 313, 314 | அங்கீகரிக்கப் படுகிறது. |
| 6 முதல் 9 முடிய | 315, 316, 317, 318 | பார்வையிட்டு அங்கீகரிக்கப் படுகிறது. |

ஒ.ம்/ திரு.அ.அறிவரசு,
தலைவர்
கூடலூர் நகர்மன்றம்
கோயம்புத்தூர்.

**//உண்மை நகல் //**

21/11/2023

ஆணையாளர்(கூ.பொ)
கூடலூர் நகராட்சி
கோயம்புத்தூர்–47

21.11.2023